DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.**

| | | |
|---|---|---|
| CC. / STC. / MC./ DVC. No | : | **CC. 219/2021** |
| Miscellaneous | : | - |

Deposition of **PW - 5 Witness for Prosecution**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. சந்திரசேகரன் |
| Father's Name | : | திரு. |
| Village | : | ஆத்தூர் |
| Taluk | : | ஆத்தூர் |
| Calling | : | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| Age | : | 62 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18.09.2024

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

துவக்க நேரம் 11.30

1) நான் தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டேன். நான் கடந்த 04.09.2021 அன்று வீரகனூர் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபொழுது ஆத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு வந்து, அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த திரு. பரமசிவம் த/பெ கலியமூர்த்தி என்பவர் அடிப்பட்டு பேச முடியாத இருந்ததால் அவரது மகன் மோகன் த/பெ பரமசிவம் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்றேன்.

2) அவர் கொடுத்த வாக்கமூலத்தின் அடிப்படையில் நிலைய குற்ற எண் 147/2021 இதச பிரிவுகள் 279, 337 ஆக வழக்கு பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அத.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3) பிறகு 05.09.2021 அன்று காலை 08.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ரஞ்ஜித்குமார், கலியபெருமாள் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை

பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(மாதிரிவரைபடம் அ.த.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

4) பிறகு ஆத்தூர் அரசு மருத்துவனைக்கு வந்து மோகன், கந்தசாமி, செல்வி, பிரகாஷ் விசாரணை செய்தும், சம்பவ இடத்தை பற்றியும், சம்பவத்தை கூறினார்கள். அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு கடந்த 05.09.2021 அன்று காலை 10.30 மணிக்கு விபத்தில் அடிப்பட்ட பரமசிவம் இறந்துவிட்டதாக தகவல் தெரிந்து மருத்துவமனை சென்று உறுதிப்படுத்திக்கொண்டு, இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை இதச பிரிவுகள் 279, 337 லிருந்து 279, 304 -A பிரிவின் கீழ் மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்று அறிக்கை தயார் செய்தேன். **(சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அ.த.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

5) இவ்வழக்கு காவல் ஆய்வாளர் விசாரணை மேற்கொள்ளவேண்டிய வழக்கு என்பதால் வழக்கு கோப்பை காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். அவர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) சம்பவம் நடந்தது 03.09.2021 இரவு 07.45 மணிக்கு நடைபெற்றது என்றாலும், முதல் தகவல் அறிக்கை 05.09.2021 அன்று 07.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும், சுமார் 36 மணி நேரம் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். ஆனால், எனக்கு தகவல் கிடைத்தவுடன் நான் சென்று வாக்குமூலம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2) எனக்கு எந்த தேதியில், எத்தனை மணிக்கு தகவல் கிடைத்து என்றால் 05.09.2021 அன்று காலை 06.00 மணிக்கு தகவல் கிடைத்தது. தகவல் கிடைத்த நேரத்திற்கும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த நேரத்திற்கும் இடையில் காலதாமதம் உள்ளது என்றால் சரிதான். நான் வீரகனூரிலிருந்து, தலைவாசல் வந்து ஆத்தூர் வருவதற்கு நேரமாகிவிட்டது.

3) சம்பவ இடம் ராயர்பாளையம் முருகன் கோவில் அருகில் உள்ள செல்வம் வீட்டு எதிரில் என முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

ராமர் வீட்டுக்கு கிழக்கால் செல்வம் வீடு உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ராமர், மற்றும் செல்வம் ஆகியோர்களை இந்த வழக்கில் சாட்சியாக நான் சேர்க்கவில்லை என்றால் நான் அங்கு சென்று விசாரித்தபொழுது அவர்கள் அங்கு இல்லை. நான் வழக்கிற்காக இவ்வாறு ராமர் மற்றும் செல்வம் வீடு பூட்டப்பட்டதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4) மேரி, புனவாசலார், மோகன் ஆகியார்களின் வீடு உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இதில் ஒன்று காலி மனை. அவர்களை இந்த வழக்கில் விசாரிக்கவும் இல்லை, சாட்சியாக சேர்க்கவும் இல்லை என்றால் சரியல்ல. சரியாக ஞாபகம் இல்லை.

5) சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு மேற்காக ராயர்பாளையம் ஏரி உள்ளது என்றால் சரியல்ல. 1/2 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. கந்தசாமி என்பவரின் நிலத்திற்கு மேற்கே நிலத்தை ஒட்டினார் போல் ஏரி உள்ளது என்றாலும், அதனை மறைத்து வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

6) முருகன் கோவில் அருகே சாட்சி கண்ணுசாமி என்பவரின் வீடு உள்ளதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். முருகன் கோவிலையோ, மற்றும் கண்ணுசாமியின் வீட்டையோ நான் மாதிரிவரைபடத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

7) கடந்த 04.09.2021 அன்று சேலம் அரசு மருத்துவமனையில் நான் எந்த சாட்சியேயும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மோகன் தனது புகார் வாக்குமூலத்தில் எனது தந்தை இயற்கை உபாதை கழிப்பதற்காக கடந்த 03.09.2021 அன்று இரவு 07.45 மணிக்கு மலையடிவாரம் சென்றதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

8) புகார் வாக்குமூலத்தில் சம்பவம் எந்த இடத்தில் நடைபெற்றதாக குறிப்பிடவில்லை என்றாலும் வீரகனூர் சாலையில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நடைபெற்றது என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. செல்வம் வீட்டின் முன்பாக விபத்து நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. புகார் வாக்குமூலத்தில் சம்பவ இடம் குறித்து குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றாலும், உண்மையை மறைத்து நான்

பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

9) மோகனின் 161 வாக்குமூலத்தில் எனது அண்ணன் கண்ணுசாமி வீட்டிலிருந்து, எனது தந்தை இயற்கை உபாதை கழிப்பதற்காக மலையடிவாரம் சென்றதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். செல்வி வாக்குமூலத்தில் நான் கடந்த 03.09.2021 அன்று ராயர்பாளையத்தில் உள்ள செல்வம் என்பவர் வீட்டில் இருந்தபொழுது, தனது தந்தை இயற்கை உபாதை கழிக்க வெளியில் சென்றார் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

10) செல்வி, செல்வம் என்பவர் வீட்டில் இருந்தபொழுதுதான் விபத்து ஏற்பட்டது என்று வாக்குமூலத்தில் சொல்லியுள்ள நிலையில் நான் செல்வம் வீடு பூட்டியிருந்ததால் அவரை விசாரிக்கவில்லை என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. செல்வி தனது வாக்குமூலத்தில், விபத்து நடந்ததை கேள்விப்பட்டு, நான் உடனே ஓடி சென்று பார்த்தேன் என்றும், எனது தந்தைக்கு அடிப்பட்டிருந்தது என்றும் சொல்லியுள்ளார் என்றாலும், விபத்தை அவர் நேரடியாக பார்த்ததாக சொல்லவில்லை என்றாலும் சரிதான்.

11) இந்த விபத்தில் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ள 1 முதல் 7 சாட்சிகள் தாங்கள் டிரைவர் வேலை செய்வதாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். பொய் சாட்சி கூற அந்த பகுதியில் இருந்தவர்கள் முன்வராதால்தான் விபத்தில் இறந்த நபரின் உறவினர்கள், தூரத்து உறவினர்கள், மற்றும் தெரிந்த டிரைவர்களை சாட்சியாக சேர்த்து பொய் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

12) இந்த வழக்கு நடந்த விதத்தை மறைத்து பொய் வழக்கு போட்டுள்ளதால்தான் இந்த விபத்தை நேரில் பார்த்த சாட்சிகள் யாரும் இல்லை என்றால் சரியல்ல. கடந்த ஆஜர் எதிரி 03.09.2021 அன்று நடந்த விபத்து குறித்த உண்மையாக சம்பவம் குறித்து 04.09.2021 அன்று வீரகனூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளரிடம் புகார் கொடுத்துள்ளரா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கு புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியும் என்றாலும், வழக்கிற்காக எனக்கு தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

13) நான் சொல்வதுபோல் சொன்ன தேதியில், சொன்ன சமயத்தில் விபத்து

நடைபெற்றவில்லை என்றால் சரியல்ல. விபத்து நடைபெற்றது. நான் கடந்த 05.09.2021 அன்று சம்பவம் இடம் செல்லவில்லை என்றாலும், சம்பவ இடத்தை பற்றி சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

14) பார்வை மகஜர் சாட்சிகளான விபத்தில் இறந்த பரமசிவம் என்பவரின் உறவினரான கலியபெருமாள், மற்றும் ரஞ்ஜித்குமார் ஆகியோர்களை காவல் நிலையத்தில் வைத்து வழக்காவணங்கள் தயார் செய்யப்பட்டது என்றாலும், சம்பவ இடத்தில் வைத்து பெறப்படவில்லை என்றாலும் சரியல்ல.

15) விபத்தில் இறந்த பரமசிவம் சம்பவ சமயத்தில் வயது முதிர்வின் காரணமாக கண்பார்வை குறைபாடினால், கவனக்குறைவாக சாலையை தட்டு, தடுமாறி கடந்து அவராக விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை

முடிவு நேரம் 12.15

Taken Down by me in Open Court Read over to the depondant in the presence of the accused and admitted by the deponant to be correct

Sd/-S. Munusamy B.Sc., B.L.,
Judicial Magistrate No.1,
Attur.